# பிரான்ஸ் மகாஜனா பழையமாணவர் சங்கத்தின்
# பதிவுகள்....

## ❍ பாவலர் துரையப்பாபிள்ளை நினைவாக நடைபெற்ற கருத்தரங்கு :
25.06.2017

**தலைப்பு : இலங்கைப்பாடசாலைகளும் புலம்பெயர் உதவிகளும்.**
எட்டுக்கருத்தாளர்கள் உட்பட நாற்பது பேர்வரையில் கருத்தரங்கில் கலந்துகொண்டனர். எனைய பாடசாலை பழையமாணவர் சங்கப்பிரதிநிதிகளும் கலந்துகொண்டு கருத்துத்தெரிவித்தனர். மூன்றரை மணிநேரம் நடைபெற்ற கருத்தரங்கு தொய்வற்று மிகவும் காத்திரமாக நடந்து கொண்டதாக கலந்துகொண்டவர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

பாவலர் நினைவுரையை மகாஜனன் திரு. செல்வச்சந்திரன் நிகழ்த்தினார்.
**கருத்தரங்கில்..**
1. இலங்கையில் இல்லாமல் போகும் இலவசக்கல்வி
2. தேவையறிந்து வழங்கப்படவேண்டிய உதவிகள்
5. உதவுவோர் மனநிலை
6. இடை நிலை மற்றும் கீழ்நிலையிலுள்ள மாணவர் கல்வி முன்னேற்றம்
7. ஆசிரியர் மற்றும் பெற்றோரது பொறுப்புணர்வு
8. பொது அமைப்புகளின் குறிப்பாக பழையமாணவர்சங்கங்களின் பொறுப்பு

போன்ற விடயங்களில் கருத்தரங்கு கவனம் கொண்டது.

பழைய மாணவர் சங்கங்களின் செயற்பாடு குறித்து அதிகம் விமர்சிக்கப்பட்டது. விளம்பர மனோபாவத்தில் உதவிகளை அள்ளிவழங்காது பாடசாலையையும் மாணவர்களையும் வளம்படுத்தும்நோக்கில் உதவிகள் வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டது.
கருத்தாளர்களின் சில கட்டுரைகள் பின்னிணைக்கப்பட்டுள்ளன.

## ❍ மகாஜனர் தினம்
**2. 7. 2017**
வருடாவருடம் கோடைகால ஒன்றுகூடலாக எமது சங்கத்தால் நடாத்தப்பட்டுவந்த நிகழ்வு இவ்வருடம் மகாஜனர் தினமாக நடாத்தப்பட்டது. புதியவர்களை உள்வாங்கவும் மகாஜனர் குடும்பங்களை மேலும் ஐக்கியப்படுத்தும் நோக்கிலும் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் வழமைக்கு அதிகமாக 180 பேர்வரையில் கலந்து சிறப்பித்தனர். இலண்டனிலிருந்தும் மகாஜனர்கள் கலந்து சிறப்பித்தமை இன்னொரு சிறப்பு. காலை 10.00 மணியிலிருந்து மாலை 7.00 மணிவரை உணவுகள், சிற்றுண்டிகள், விளையாட்டுக்கள் என மிகவும் ஆரவாரமாக மகாஜனர் குடும்பங்களும், நணபர்களும் ஒன்றுகூடி மகிழ்ந்தனர்.

## ❍ வில்பந்த் நகரசபைக்கொண்டாட்டம்
**9.9.2017**
எமது சங்கம் பதிவுசெய்யப்பட்ட நகரசபையுடனான எமது உறவுகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக வில்பந்த் நகரசபையின் வேண்டுகோளுக்கிணங்க விலபந்த் சங்கங்களை இணைத்து கொண்டாடப்பட்ட ஒரு நாள் நிகழ்வில் நாங்களும் பங்காளர்களானோம். எம்மால் அமைக்கப்பட்ட இலங்கை இந்திய உணவுச்சாலை பிறநாட்டவர் மத்தியில் அமோக வரேவேற்பினைப்பெற்றது. இது எமக்கான சிறிய வருமானத்தையும் பெற்றுத்தந்தது. இந்நிகழ்வினை இளம் மகாஜனன்கள் அதாவது இங்கு பிறந்த அடுத்த தலை–முறையினர் முன்னின்று நடாத்தியமை எமது சங்கத்தின் நம்பிக்கையான எதிர்காலத்தினை கட்டியம்கூறி நின்றது.

## ❍ சரஸ்வதி பூஜை

**26. 9. 2017**

மகாஜனக்கல்லூரிப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக வருடாவருடம் லாக்கூர்னெவ் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் எமது சங்கத்தின் சார்பில் சரஸ்வதிபூஜைநிகழ்வு நடாத்தப்பட்டுவருகிறது. அந்தவகையில் இந்த ஆண்டும் வெகு சிறப்பாக சரஸ்வதிபூஜை நடாத்தப்பட்டது.

# பாடசாலைக்கான செயற்திட்டங்கள்

### ● தொண்டராசிரியருக்கான கொடுப்பனவு

பாடசாலையின் நியாயமான தேவையினை கருத்திற்கொண்டு ஆரம்பபிரிவிற்கான மூன்று தொண்டராசிரியர்களுக்கான மாதாந்த கொடுப்பனவினை வழங்க எமது சங்கம் முன்வந்துள்ளது.

### ● புலமைப்பரிசில் மாணவருக்கான ஊக்குவிப்பு

புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளியை எட்டாது சோர்ந்து துவண்டுபோகும் மாணவர்களை ஆற்றுப்படுத்தி தேற்றும் முகமாக நூறுக்கு மேல் வெட்டுப்புள்ளியை அண்மித்த மாணவர்களுக்கு 1000 ரூபாவினை கடந்த மூன்றாண்டுகளாக வழங்கிவருகிறோம். இந்த ஆண்டும் அச் செயற்திட்டத்தை எமது நிர்வாகம் தொடர்கிறது. இக் குழந்தைகளை தேற்றும் பணியில் அயற்கிராம பாட–சாலை மாணவர்களையும் இணைத்துவருகிறோம்.

### ● அதிபர் கனகசபாபதி நினைவுப்பரிசு

வழமைபோல இந்த ஆண்டும் அதிபர் ஜெயரத்தினம் நினைவுதினத்தன்று சிறந்த **சமுதாயசிந்தனையுடைய மாணவருக்கான விருது** வழங்கப்படுகிறது. சமுதாய சிந்தனையுடைய மாணவர்களை ஊக்குவிக்கவும், சமுதாய பார்வைமிக்க அதிபர் கனகசபாபதி அவர்களை கௌரவித்து நினைவுகூருமுகமாகவும் இப்பரிசு வழங்கப்படுகிறது. தெரி–வாகும் மாணவருக்கு 10.000 ஆயிரம் ரூபா பரிசாக வழங்கப்படும்.

### ● ஆதரவற்ற மாணவருக்கான உதவி

வறுமைக்கோட்டின் கீழ்வாழும் மாணவர்களின் கல்விமேம்பாட்டிற்கு உதவும் முகமாக வருடத்திற்கு 10 ஆயிரம்ரூபாவினை குறித்தமாணவருக்கு வழங்க எமது சங்கம் முன்வந்துள்ளது. இதன் முதற்கட்டமாக அடுத்த ஆண்டு ஜனவரியிலிருந்து ஆண்டு 9, ஆண்டு 10 ல் கல்விபயிலும் 10 மாணவர்களுக்கு தலா பத்தாயிரம்ரூபா வழங்கப்படுகிறது. தெல்லிப்பழை தாய்ச்சங்கத்தின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் மேலும் விரிவாக்கப்படும்.

மேற்படி செயற்திட்டங்களுக்கான முற்பணமாக இரண்டரை லட்சம் ரூபாக்களை கடந்தமாதம் எமது தாய்சங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ளோம்.